**தமிழ்நாடு அரசு**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை**

**தனித்தேர்வர்களுக்கான முதனிலைத் தேர்வு, டிசம்பர் 2017**

2018ம் ஆண்டு ஜனவரி / பிப்ரவரி மாதத்தில் கைவினைஞர் பயிற்சித் திட்டத்தின் கீழ் தேசிய தொழிற் பயிற்சி குழுமத்தால் (NCVT) நடத்தப்படும் அகில இந்திய தொழிற்தேர்வில் தனித் தேர்வர்களாக (Private Candidates) கலந்து கொள்ள தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பிக்க குறைந்தபட்சம் **23 வயது** பூர்த்தி அடைந்தவராக இருக்க வேண்டும்.

விண்ணப்பிக்கும் தொழிற்பிரிவிற்கான குறைந்தபட்ச கல்வித் தகுதி மற்றும் அரசு பதிவு பெற்ற நிறுவனத்தில் **(தொழிற்சாலை சட்டம் 1948–ன் கீழ் அல்லது தொழிற்பழகுநர் சட்டம் 1961–ன் கீழ் அல்லது SSI பதிவு பெற்ற)** குறைந்தபட்சம் **3 ஆண்டுகள்** முன்னனுபவம் பெற்றுள்ள முறையான பணியாளர்களால், மேற்கண்ட நிறுவனங்களில் தற்போது பணிபுரிந்து கொண்டிருக்கும் நபர்கள் தனித்தேர்வராக தேர்வெழுத தகுதியுடையவராவர். விண்ணப்பதாரர் முழுநேரப் பணியாளராக பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

மாநில தொழிற் பயிற்சித் திட்டத்தின் கீழ் ( S.C.V.T) பயிற்சி பெற்று (அதே பயிற்சிக் காலம் மற்றும் கல்வித் தகுதி) சான்றிதழ் வைத்திருப்பவர்கள் தனித்தேர்வராக தேர்வெழுத அதே தொழிற்பிரிவில் விண்ணப்பிக்கலாம். SCVT பயிற்சி திட்டத்தில் பருவமுறைப்படி பயிற்சி பெற்று வரும் பயிற்சியாளர்களும் தனித்தேர்வாளர்களாக எழுத விண்ணப்பிக்கலாம்.

தொழிற்பழகுநர் சட்டம் 1961–ன் கீழ் அடிப்படை பயிற்சி மையத்தில் (Basic Training Centre) தொழிற்பழகுநர் பயிற்சி பெற்று, தொழிற்பழகுநர்களுக்கான தொழிற்தேர்வில் 6 முறையும் தோல்வியுற்றவர்கள் தனித் தேர்வராக தேர்வெழுத விண்ணப்பிக்கலாம். ஆனால் அவ்வாறு தனித்தேர்வு எழுதுபவர்கள் ஏற்கனவே தேசிய தொழிற் சான்றிதழ் ( N.T.C. ) பெற்றிருக்கக் கூடாது.

தகுதியுள்ள நபர்களுக்கு முதனிலைத் தேர்வு **13.12.2017** மற்றும் **14.12.2017** ஆகிய தேதிகளில், கிண்டி, அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் இத்துறையால் நடத்தப்படும். இதில் தேர்ச்சி பெறுபவர்கள் மட்டுமே ஜனவரி / பிப்ரவரி **2018**ல் நடைபெறவுள்ள அகில இந்திய தொழிற்தேர்வில் முதல் பருவமுறைத் தேர்வில் தனித்தேர்வராக (Private Candidate) கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர். தொடர்ந்து தொழிற்பிரிவுக்கு ஏற்ப அனைத்து பருவ முறை தேர்வுகளில் வெற்றி பெறுபவர்களுக்கு N.C.V.T., புதுடெல்லி மூலம் தேசிய தொழிற் சான்றிதழ் (National Trade Certificate) வழங்கப்படும்

தனித்தேர்வராக விண்ணப்பிக்க விரும்புகிறவர்கள், தொழிற்தேர்விற்குரிய விண்ணப்பப் படிவம் மற்றும் முழு விபரங்கள் அடங்கிய விளக்கக் குறிப்பேடு (Prospectus) ஆகியவைகளை கீழ்க்காணும் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் **23.10.2017** முதல் ரூ. 50/– (ரூபாய் ஐம்பது மட்டும்) ரொக்கமாக செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப் படிவங்கள் விற்பனை செய்யப்படும் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | அம்பத்தூர் | 10 | நாகபட்டினம் | 19 | தேனி |
| 2 | வடசென்னை | 11 | உளுந்தூர்பேட்டை | 20 | புதுக்கோட்டை |
| 3 | கிண்டி | 12 | கோயமுத்தூர் | 21 | பரமக்குடி |
| 4 | வேலூர் | 13 | ஈரோடு | 00022 | நாகர்கோவில் |
| 5 | திருவண்ணாமலை | 14 | தாராபுரம் | 23 | திருநெல்வேலி (பேட்டை) |
| 6 | செங்கற்பட்டு | 15 | சேலம் | 24 | தூத்துக்குடி |
| 7 | திருச்சி | 16 | ஓசூர் | 25 | விருதுநகர் |
| 8 | தஞ்சாவூர் | 17 | மதுரை | | |
| 9 | கடலூர் | 18 | திண்டுக்கல் | | |

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 22.11.2017 க்குள் மேற்கண்ட அரசினர் தொழிற்பயிற்சி நிலைய முதல்வர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும். அதற்குப் பின் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. இது தொடர்பாக பிற விபரங்கள் www.skilltraining.tn.gov.in என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது,

இயக்குநர்

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**தமிழ்நாடு அரசு**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, கிண்டி, சென்னை – 600 032.**
**தனித்தேர்வர்களுக்கான முதனிலைத் தேர்வு– 2017**
**விளக்கக் குறிப்பு**

தேசிய தொழிற் பயிற்சி குழுமத்தால் (NCVT) நடத்தப்படும், அகில இந்திய தொழிற்தேர்வுக்கு தனித்தேர்வர்களாக தேர்வு எழுதுவதற்கு, மாநில அளவில் முதனிலைத் தேர்வு ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதம் நடத்தப்பட்டு வருகிறது. முதனிலைத் தேர்விற்கான தொழிற்பிரிவுகளின் விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

**பொது**

தனித் தேர்வரது விண்ணப்பத்தினை நிராகரிப்பது மற்றும் தேர்வு மையம் ஒதுக்கீடு செய்வதில் துறைத் தலைவரின் முடிவே இறுதியானது. சரி வர பூர்த்தி செய்யப்படாத மற்றும் தவறான விபரங்களடங்கிய விண்ணப்பங்கள் எவ்வித காரணமும் தெரிவிக்கப்படாமல் நிராகரிக்ககப்படும்.

**வயது வரம்பு**

விண்ணப்பதாரர் விண்ணப்பிக்கும் நாளில் **23 வயது பூர்த்தியடைந்தவராக** இருக்க வேண்டும். SCVT சான்றிதழ் வைத்திருப்போர் / SCVT-யில் பயிற்சி பெற்று வரும் பயிற்சியாளருக்கும், மேலும் இத்துறையால் நடத்தப்பட்ட தொழிலாளர்களுக்கான மாலை நேர வகுப்பில் பயிற்சி பெற்று தேர்ச்சி பெற்றவர்களுக்கு இந்த வயது வரம்பு பொருந்தாது.

**முன்னனுபவம்**

தொழிற் பழகுநர் சட்டத்தினை செயல்படுத்தும் நிறுவனங்கள் / அரசு அல்லது உள்ளாட்சி மன்றத்தில் பதிவு பெற்ற அல்லது தொழிற்சாலை சட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் சிறு நிறுவனங்கள் ஆகிய ஏதாவது ஒன்றில் **3 ஆண்டுகள்** முன்னனுபவம் பெற்றிருக்க வேண்டும். பகுதி நேரப் பணியாளராக பணிபுரிந்த முன்னனுபவக் காலம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

**தகுதி**

மேற்கண்ட நிறுவனங்களில் தற்போது பணிபுரிந்து கொண்டிருக்கும் நபர்கள் தனித்தேர்வராக தேர்வெழுத தகுதியுடையவராவர். விண்ணப்பதாரர் முழுநேரப் பணியாளராக பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

விண்ணப்பிக்கும் தொழிற் பிரிவில் மாநில வாழ்வியல் பயிற்சித் திட்டத்தின் கீழ் (S.C.V.T) பயிற்சி பெற்று (அதே பயிற்சிக் காலம் மற்றும் கல்வித் தகுதி) S.C.V.T சான்றிதழ் வைத்திருப்பவர்கள் தனித்தேர்வராக தேர்வெழுத விண்ணப்பிக்கலாம்.

மாநில தொழிற் பயிற்சி குழுமத்தால் நடத்தப்பட்டு வரும் மாநில பருவத் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்று வரும் பயிற்சியாளர்கள் தேசிய தொழிற் பயிற்சி குழுமத்தால் நடத்தப்படும், அகில இந்திய பருவமுறை தொழிற் தேர்வில் நேரிடையாக கலந்து கொள்ளலாம். SCVT தொழிற்தேர்வில், பருவமுறை திட்டத்தில் பயிற்சி பெற்று தேர்ச்சி பெற்ற பயிற்சியாளர்கள் உடனடியாக, அதே பருவத்தில் அகில இந்திய தொழிற்தேர்வெழுத அனுமதிக்கப்படுவர்.

தொழிற்பழகுநர் சட்டம் 1961–ன் கீழ் தொழிற் பழகுநர் பயிற்சி பெற்று, தொழிற் பழகுநர்களுக்கான தொழிற்தேர்வில் 6 முறையும் தோல்வியுற்றவர்கள் தனித் தேர்வருக்கு விண்ணப்பித்து அகில இந்திய பருவமுறை தொழிற் தேர்வில் நேரிடையாக கலந்து கொள்ளலாம்.. ஆனால் அவ்வாறு தனித்தேர்வு எழுதுபவர்கள் ஏற்கனவே தேசிய தொழிற் சான்றிதழ் (N.T.C.) பெற்றிருக்கக் கூடாது.

**கல்வித் தகுதி**

அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்வதற்கான கல்வித் தகுதியே தனித்தேர்வர்களுக்கும் பொருந்தும்.

**குறிப்பு** :

1. விண்ணப்பதாரர் மேற்குறிப்பிட்ட நிறுவனங்களில் முறையான பணியாளராக பணிபுரிந்து கொண்டிருக்க வேண்டும். தினக்கூலி (Casual Worker), தொழிற்பழகுநர் (Apprentices) மற்றும் உதவியாளராக (Helper) பணிபுரிபவர்கள் மற்றும் நிரந்தரப் பணியாளர்களாக பணிபுரியாத எவரும் தனித்தேர்வெழுதத் தகுதியற்றவராவர்.
2. தற்போது பணியில் இல்லாதவர்கள் தனித்தேர்வெழுதத் தகுதியற்றவராவர்.
3. ஒப்பந்ததாரர்களிடம் (Contractors) பணிபுரிபவர்கள் தனித்தேர்வெழுதத் தகுதியற்றவராவர்.
4. தனித்தேர்வர் எந்தத் தொழிற் பிரிவிற்கு விண்ணப்பிக்கிறாரோ அந்தத் தொழிற் பிரிவில் முன்னனுபவம் பெற்றிருக்க வேண்டும். அவ்வாறு விண்ணப்பித்த தொழிற் பிரிவில் முன்னனுபவம் இல்லையெனில் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.
5. தனித் தேர்வரின் விண்ணப்பத்தில் தாம் பணிபுரியும் நிறுவனம் பதிவு செய்யப்பட்ட விபரம் நிறுவன அதிபரால் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். மேலும், நிறுவன பதிவு சான்றிதழின் (Registration Certificate) சான்றொப்பமிடப்பட்ட நகலினை (attested copy of Company’s current

Registration Certificate) விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். அவ்வாறு இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**தேர்வுக் கட்டணம்**

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தேர்வுக் கட்டணமாக ரூ.200/– (ரூபாய் இருநூறு மட்டும்) தமிழக அரசின் கருவூலத்தில் / பாரத ஸ்டேட் வங்கியின் கருவூலக் கிளையில் (Sub-Treasury or State Bank of Treasury Branch) கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் செலுத்துச் சீட்டு மூலம் செலுத்த வேண்டும்.

***"2230. Labour and Employment - 800. Other Receipts - AC. Craftsmen Training Scheme - 03. Fees for All India Trade Test (DPC 0230-00-800-AC-0304)***

**முதனிலைத் தேர்வு (Preliminary Test)**

தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு மட்டும் முதனிலைத் தேர்வு நடத்தப்படும். மேற்படி முதனிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் மட்டும் அகில இந்திய தொழிற்தேர்வில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர். முதனிலைத் தேர்விற்கான தேர்வு மையம் மற்றும் அகில இந்திய தொழிற்தேர்விற்கான தேர்வு மையங்கள் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, இயக்குநர் அவர்களால் தீர்மானிக்கப்படும். எக்காரணத்திற்காகவும் தேர்வு மைய மாற்றங்கள் அனுமதிக்கப்பட மாட்டாது.

**சான்றிதழ்கள்**

அகில இந்திய தொழிற்தேர்வு எழுதி தேர்ச்சி பெறும் தனித்தேர்வர்கள் என்.சி.வி.டி., புதுடெல்லியால் வழங்கப்படும் தேசிய தொழிற்சான்றிதழ் பெறுவதற்குத் தகுதியுடையவராவர். எனினும், தேர்வு முடிவுகள் அறிவிக்கப்பட்டவுடன் தேர்ச்சி பெற்ற அனைத்துத் தனித்தேர்வர்களுக்கும் தற்காலிக தேசிய தொழிற் சான்றிதழ்கள் இத்துறையால் வழங்கப்படும். தனித்தேர்வர்கள் தொழிற்பழகுநர் பயிற்சி பெறுவதற்குத் தகுதியானவர்களில்லை.

**பாடத்திட்டம் (Syllabus)**

அகில இந்திய தொழிற் தேர்வு, பருவமுறை (Semester) அடிப்படையில் நடத்தப்பட்டு வருகிறது. தேசிய தொழிற் பயிற்சி குழுமத்தின் பாடத்திட்டமே தனித்தேர்வர்களுக்கும் பொருந்தும். பொறியியல் தொழிற்பிரிவுகளுக்கு (Engineering Trades) - செய்முறை (Practical), கருத்தியல் (Trade Theory), பணிமனைக் கணிதம் மற்றும் அறிவியல் (Workshop Calculation & Science), பொறியியல் வரைபடம் (Engineering Drawing) மற்றும் வேலைவாய்ப்பு திறன் (Employability Skills) ஆகிய பாடங்களில் தேர்வு நடத்தப்படும். பொறியியல் அல்லாத தொழிற்பிரிவுகளுக்கு (Non-Engineering Trades) செய்முறை (Practical), கருத்தியல் (Trade Theory) மற்றும் வேலைவாய்ப்பு திறன் (Employability Skills) ஆகிய பாடங்களில் மட்டும் தேர்வு நடத்தப்படும்.

**தனித்தேர்வர்க்கான விண்ணப்பத்துடன் கீழ்க்காணும் சான்றிதழ்களைக் கண்டிப்பாக இணைக்க வேண்டும்**

1. மாற்றுச் சான்றிதழ் (அசல்)
2. மதிப்பெண் சான்றிதழ் (அசல்)
3. எஸ்.எஸ்.எல்.சி. புத்தகம் (அசல்)
4. பணிபுரியும் நிறுவனத்தின் அஞ்சல் தாளில் (Company Letter-head) வழங்கப்பட்ட முன்னனுபவச் சான்று. எக்காரணத்தைக் கொண்டும் முன்னனுபவச் சான்று திரும்ப வழங்கப்பட மாட்டாது.
5. துணை வட்டாட்சியர் தகுதிக்குக் குறையாத வருவாய்த் துறை அதிகாரியால் சான்றொப்பமிடப்பட்ட விண்ணப்பதாரரின் மாதிரிக் கையொப்பம் (அசல்)
6. விண்ணப்பதாரர் பணிபுரியும் நிறுவனத் தலைவரால் வழங்கப்பட்ட விண்ணப்பதாரரின் பணி பற்றிய அறிக்கை (அசல்) (நிறுவன அஞ்சல் தாளில் வழங்கப்பட வேண்டும்).
7. சான்றொப்பமிட்ட நிறுவன பதிவுச் சான்றிதழ் நகல் (Company Registration Certificate)
8. தொழிற் பழகுநர் சட்டத்தின் கீழ் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட அறிவிப்பு (Notification) நகல் சான்றொப்பமிட்டு இணைக்க வேண்டும்.
9. அண்மையில் எடுக்கப்பட்ட பாஸ்போர்ட் அளவு புகைப்படங்கள்–2 , விண்ணப்பதாரரால் கையொப்பமிடப்பட்டு அரசிதழ் பதிவு பெற்ற அரசு அதிகாரியால் சான்றொப்பமிட்டு இணைக்கப்பட வேண்டும்.
10. *S.C.V.T சான்றிதழ்* (அசல்)

**குறிப்பு :**
1. அஞ்சல் மூலமாக தாமதமாகப் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்கப்படாது
2. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசித் தேதி : **22-11- 2017.**

| s.no | List of the trade |
|---|---|
| 1 | Draughtsman (Mechanical) |
| 2 | Draughtsman (Civil) |
| 3 | Surveyor |
| 4 | Fitter |
| 5 | Turner |
| 6 | Machinist |
| 7 | Machinist (Grinder) |
| 8 | Refrigeration & Air-Conditioning Mechanic |
| 9 | Instrument Mechanic |
| 10 | Tool & Die Maker (Press Tools, Jigs & Fixtures) |
| 11 | Tool & Die Maker (Dies & Moulds) |
| 12 | Mechanic Machine Tool Maintenance |
| 13 | Electrician |
| 14 | Electroplater |
| 15 | Wireman |
| 16 | Lift Mechanic |
| 17 | Electronic Mechanic |
| 18 | Information Technology & Electronics System Maintenance |
| 19 | Mechanic Mechatronics |
| 20 | Mechanic (Motor Vehicle) |
| 21 | Mechanic Agricultural Machinery |
| 22 | Painter (General) |
| 23 | Mechanic Maintenance (Chemical Plant) |
| 24 | Instrument Mechanic (Chemical Plant) |
| 25 | Welder (Gas & Electric) |
| 26 | Foundryman |
| 27 | Carpenter |
| 28 | Sheet Metal Worker |
| 29 | Plumber |
| 30 | Mechanic (Diesel) |
| 31 | Mechanic (Tractor) |
| 32 | Pump Operator-cum-Mechanic |
| 33 | Mason (Building Constructor) |
| 34 | Plastic Processing Operator |
| 35 | Mechanic Auto Electrical & Electronics |
| 36 | Computer Operator & Programming Assistant |
| 37 | Stenography (English) |
| 38 | Cutting & Sewing |
| 39 | Embroidery & Needle Work |
| 40 | Dress Making |
| 41 | Computer Aided Embroidery & Needlework |
| 42 | Desk Top Publishing Operator |
| 43 | Textile Wet Processing Technician |
| 44 | Manufacturer of Footwear |
| 45 | Leather Goods Maker |
| 46 | Digital Photographer |
| 47 | Marine Engine Fitter |